**கற்பிட்டி பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கற்பிட்டி பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும்

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 20 மில்லியனான நிலையான வைப்புகளிற்குரிய மீளாய்வாண்டில் 132 நாட்களுக்காக பெற வேண்டிய வட்டி ரூபா 710,992 தொகையை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 திசெம்பர் 31 தகதி வரையான காலத்திற்கு வைப்புப் பணத்திற்காக பெறவேண்டிய வட்டியான ரூபா 710,992 இனை 2019 ஆண்டில் கணக்கீடு செய்ய தவறியுள்ளதால், அதனை இவ்வாண்டின் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 கணக்கு விடயங்களிற்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகள், உபயோக புத்தகங்கள் பிரகார மீதிகள் மற்றும் நிதிகூற்றுக்கள் பிரகார மீதிகளிற்கிடையிலான இணங்காமைகளின் கூட்டுத்தொகை ரூபா 2,098,788 ஆனது. | மீதிகளில் உள்ள வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் அவ் வித்தியாசங்களை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 2019 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 124,613,031 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய மீதிகள் ரூபா 10,799,670 ஆனது. | பெற வேண்டிய பணத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் முயற்சி எடுப்பதுடன் அறவிட முடியாதவற்றை அங்கீகாரத்தின் மீது பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) 2019 திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 92,299,220 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 7,442,826 மீதியும் காணப்பட்டது. | செலுத்த வேண்டிய செலவினத்தை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை தகவல்களை பெற்றுக்கொண்டு செலத்துவதற்கும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை தவணைகளாக செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததால் கூட்டுத் தொகை ரூபா 618,262,514 ஆன 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். | உரிய படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் காணிகளுக்குரிய ஒப்படை உறுதி என்பவற்றை எதிர்காலத்தில் சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

-------------------

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்கள் உடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம்** | | | |
| (i) 129 (2) (ஊ) பிரிவு | பிரதேச சபைக்கு பெற வேண்டிய குத்தகை வாடகை, கடை வாடகை முறையாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குத்தகை வாடகை மற்றும் கடை வாடகையை அறவிடுவதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) 136 பிரிவு | சபை எல்லையினுள் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக வீதவரி மற்றும் ஏக்கர் வரி வருமானங்களை சிட்டைப்படுத்தி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். இதுவரை மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக சபைக்கு சொந்தமான சொத்துக்களின் வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அச் சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியுள்ள குத்தகைகாரர்களிடமிருந்து வீதவரி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கிறேன். |
| (iii) 158 பிரிவு | விதவரி மற்றும் ஏக்கர் வரி நிலுவை தொகையை அறவிடுவதற்காக அவ் வரியை செலுத்த வேண்டியவர்களின் அசையும், அசையாச் சொத்துக்களைத் தடை செய்து | குறித்த விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். இது வரை குறித்த சட்டவிதிகள் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு விடய பொறுப்பு அலுவலரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| **(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| (i) 33 ஆம் இலக்க விதி | ஆதனங்கள் தடை செய்யும் எழுத்தாணைப் பத்திரம் ஒவ்வொரு காலாண்டிறுதியிலும் தயாரித்திருக்கவில்லை. | குறித்த விதிகள் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதனங்கள் தடை செய்யும் அழைப்பானை காலாண்டு இறுதியில் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அறிவூட்டப்பட்டுள்ளது. |
| (ii) விதி இலக்கம் 65 | கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டுள்ள காலஎல்லை இறுதியில் கொடுப்பனவைப் புறக்கணிக்கும் நபர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை தயாரித்திருக்கவில்லை. | குறித்த விதிகள் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆண்டில் நிதி விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர்களிற்கு ஆலோசனை வழங்கி கொடுப்பனவைப் புறக்கணிக்கும் நபர்களின் பெயர் பட்டியல் ஒன்று சபையிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(ஈ) | 1989 ஆண்டிலிருந்து 2007 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் பெற்றுக்கொண்ட ரூபா 229,658 ஆன முற்பணத்தை தீர்ப்பத்றகு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட முடியுமான முற்பணம் இருப்பின் அவற்றை அறவிடவும் அல்லது அக்காலத்தினுள் தீர்த்து உரிய முறையில் பதிவிடப்படாத முற்பணம் இருப்பின் குழு பரிந்துரை பிரகாரம நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) நிதிப்பிரமாணம் 571(2) | ரூபா 458,857 ஆன காலாவதியான வைப்புகள் தொடர்பாக நடவக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்த சங்கங்களிற்கு எழுத்து மூலம் அறிவித்தல் ஒன்றை விடுத்து 14 நாட்கள் காலஎல்லையினுள் முன்வராத அனைத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சங்கங்கள் மற்றும் வைப்பாளர்களின் வைப்புக்களை நி.பி 571 பிரகாரம் நிதியத்திற்கு செலவு வைக்க தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | 2019 ஆண்டின் போது சபைக்கு சொந்தமான வாகனங்களில் தின ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்புகளில் மூலப்பிரதி கணக்காய்வாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். ஓட்டக்குறிப்புகளில் மூலப்பிரதிகளை எதிர்காலத்தில் கணக்காய்வாளரிற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு விடய பொறுப்பு உத்தியோகத்தரிற்று ஆலோசனை வழங்ப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,362,687 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,068,615 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i | வீத வரி மற்றும் வரி | 1,168 | 1,831 | 720 | 11,622 | 2,225 | 3,204 | 1,739 | 10,521 |
| ii | வாடகை | 12,014 | 9,468 | 9,493 | 7,154 | 10,968 | 10,056 | 8,643 | 7,179 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,200 | 1,719 | 1,736 | 43 | 4,136 | 2,607 | 2,607 | 60 |
| iv | ஏனைய வருமானம | 105,121 | 93,992 | 55,546 | 41,411 | 96,116 | 91,566 | 48,143 | 43,424 |
| | | 120,503 | 107,010 | 67,495 | 60,230 | 113,445 | 107,433 | 61,132 | 61,184 |

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேகரித்த வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேகரித்த வருமானமும் உள்ளடங்கியுள்ளன.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மொத்த பில் இடப்பட்ட வருமானம் ரூபா 107,010,699 மற்றும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் இருந்த நிலுவை ரூபா 61,184,871 ஆனதுடன், ஆண்டினுள் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்தது மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து ரூபா 67,495,765 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒட்டுமொத்த வருமான சேகரிப்பின் முன்னேற்றம் 40 சதவீத அளவானது. | ஆண்டினுள் பில் இடப்பட்ட வருமானங்களை ஆண்டினுள்ளயே அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரியிலிருந்து 50 சதவீதத்தை இவ் ஆண்டில் அறவிடவும் கணிபபீட்டின் பிரகாரம் ஏக்கர் வரி அறவிடவும் நீர் குழாய் தொகுதியை நவீனமயமாக்கி உரிய முறையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உபயோக பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 10,208,256 ஆனதுடன், அந் நிலுவையினுள் 01 ஆண்டை விஞ்சிய மற்றும் 05 ஆண்டுகளிற்கு குறைந்த ரூபா 3,999,130 யும் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 5,168,617 ஆன தொகையும் காணப்பட்டன. | அறவிட வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 20 ஆண்டுகளிற்கு பின் 2010 ஆண்டில் வீதவரி மீள்திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டதனால் காணிகளில் மதிப்பீட்டு பெறுமதி துரிதமாக உயர்வடைந்ததனால் வீதவரி அதிகரித்தன் மீது ஏற்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமை காரணமாக அதற்கு மாற்றீடாக நிலுவை வீதவரியினை பகுதிகளாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உபயோக பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் காணி உரிமையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ஏக்கர் வரி நிலுவை ரூபா 914,168 ஆனதுடன் | பதிவேடுகளை நாளாதுவரையாக பேணி வருமானம் அறவிட நடவடிக்கை | தற்போது இவ் ஏக்கர் வரி கணிப்பாய்விற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை பணத்துடன் ஏக்கர் |

| | | |
|---|---|---|
| அந் நிலுவையில் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 506,555 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 407,613 வும் காணப்பட்டன. | எடுக்க வேண்டும். | வரியை அறவிட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உபயோக பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை கடையறை வாடகை மற்றும் குத்தகை வாடகைகளில் கூட்டுத் தொகை ரூபா 7,154,484 ஆனதுடன் அந் நிலுவையின் ரூபா 4,643,995 ஆன தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மற்றும் ரூபா 1,530,689 தொகை 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைலான காலத்திற்குரிவையாகும். | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடையறை வாடகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் புதிய உடன்படிக்கைகள் கைச்சாத்திட முனனர் நிலுவையை அறவிட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நிலுவை இறைச்சிக்கடை வாடகை அறவிட அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 இலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை 61 வியாபார நிலையங்களில் இருந்து அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 42,735 ஆன நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திர கட்டணத்தை உரிய நேரத்திற்கு அறவிடுவது குறிப்பிட்ட அலுவலரின் பொறுப்பாகுமென கவனத்திற்கு எடுக்க வேண்டும். | அந் நிலுவை பணத்தை அறவிட முடியாத நிலையில் உளளதால் அவற்றை ஏடுகளிலிருந்த பதிவழிக்க வடமேல் மாகான உள்ளுராட்ச்சி ஆனையாளரின் அங்கீகரிப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 28,149,051 மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 7,050,203 ஆனது. | அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்ள வடமாகாண வருமான திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மீதி உறுதிப்பாட்டுக் கடிதம் தற்போது கிடைத்துள்ளது. |

| | | |
|---|---|---|
| | எடுக்க வேண்டும். | பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்திலிருந்து ரூபா 12 மில்லியன் தொகை தற்போது கிடைத்துள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட 42 உப விதிகளிற்கு மேலதிகமாக சபையினால் 12 புதிய உப விதிகள் விதிக்கப்பட்டிருந்ததோடு உத்தேசிக்கப்பட்ட உப விதி ஒன்றை அங்கீகாரத்திற்காக சமர்பித்திருக்கவில்லை. | குறித்த உப விதிகள் விதிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். சபையினால் தயாரிக்கப்பட்ட உப விதிகளிற்காக அங்கீகாரத்தை பெற்ற பின்னர் வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்டதுடன் மேலும் தேவையான உப விதிகளை தயாரிக்க தேவையான உதவிகளை நலகுமாறு உள்ளூராட்சி திணைக்களத்தினூடாக உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்திடம் கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ‘‘ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு மீளாய்வாண்டில் போது அதற்கு இணங்கி செயற்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள திட்டம் செயற்படத்தப்பட வெண்டும். | நோக்கங்களை அடைந்து கொள்ள ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்து பிரிவு திட்ட செயற்பாடுகளிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | களியாட்டல் வரி அறவிட உப விதியொன்று விதிக்கப்பட்டு இருக்கவில்லை. | உப விதியொன்று விதிக்கப்பட வேண்டும். | மதிப்பிற்குரிய ஆளுநரின் அங்கிகாரத்தை பெற்றுக் கொள்ள சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. குறித்த அங்கீகாரம் கிடைத்த பின் அவ்வரி விதிக்கும் கட்டளையை வர்த்தமானியின் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளூராட்சிச் சேவைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பாக ரூபா 1,992,035 செலுத்த வேண்டியிருந்த போதிலும், சபை அத்தொகையை செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பெறுமதிகளை இனங்கண்டு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்துதலை விரைவாக மேற்கொள்ள வேண்டும். | ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பாக ரூபா 1,992,035 செலுத்த வேண்டியிருந்த போதும், அது தொடர்பான தகவல்களை பெற்றுத் தருமாறு 2019.05.13 திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. அதே போன்று 2019.06.11 திகதி நடந்த மகா சபை கூட்டத்திற்கும் இந் நிலுவை பணத்தை செலுத்த தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து தருமாறு முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | உள்ளூராட்சி சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின மூலம் வழங்கப்பட்டிருந்த 464 கொடிக் கம்பங்களில் ரூபா 147,344 பெறுமதியான 115 கொடிக் கம்பங்கள் கடந்த வருடங்களில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, அந்த கொடிக் கம்பங்களையோ அதன் பெறுமதியையோ பணத்தின் மூலமேனும் மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>2017 ஆம் ஆண்டில் 31 கொடிக் கம்பங்களும், 2018 ஆம் ஆண்டில் 62 கொடிக் கம்பங்களும் காாணமல் போயிருந்ததுடன் அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணாமல் போனது தொடர்பில் சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் அங்கத்தவர்களுக்கு மற்றும் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்ட 115 கொடிக் கம்பங்கள் தொடர்பான தகவல்கள் ஏதும் இல்லாததால் அவற்றை அறவிட முடியாதுள்ளதாகவும் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் காணாமல் போன 93 கொடிக் கம்பங்களை தொடர்பாக களஞ்சிய பொறுப்பாளரிடம் கம்பங்களின் பெறுமதியையும் 25 சதவீத அரச கட்டணத்தையும் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஈ) | உள்நாட்டு இறைவரி திணைக்ளத்திற்கு செலுத்த வேண்டிய வெட் வரிப் பணத்தை முறையாக செலுத்தாததால் ரூபா 1,477,252 ஆன தண்டப்பணம் சபைக்கு விதிக்கப்பட்டிருந்தது. | வெட் வரிப் பணத்தை முறையாக செலுத்தாதது தொடர்பாக பொறுப்பாளர்களிடம் தகவல்களை விசாரிக்க வேண்டியதுடன் அரசு விதிக்கும் வரித் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் செயலாளரினால் குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடியதன் பின்னர், தண்டப்பணத்தை பதிவழிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் அவ் வெட் பணத்தை 2020 ஆண்டு முடிவடைய முன்னர் பகுதிகளாக செலுத்தி முடிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த வரித் தொகையை தண்டம்பணம் இன்றி இவ்வருடம் முடிவடைய முன்னர் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் செயலாளர் பதவி பல வருடங்களாக வெற்றிடமாக உள்ளதோடு இரண்டாம் நிலை தரத்தில் 04 அலுவலர்கள் மற்றும் ஆரப்ப நிலையில் 06 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | ஊழியர் வெற்றிடங்களை முறையாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் செயலாளர் பதவி பல வருடங்களாக வெற்றிடமாக உள்ளதுடன், இரண்டாம் நிலை அலுவலர் பதவிகளிற்கு ஆட்சேர்க்க சமர்பிக்கப்பட்டுள்ளதுடன், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு ஊடாக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று ஆரப்ப நிலையில் 06 பதவிகள் வெற்றிடங்களிற்காக ஆட்சேர்கவும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேலும் அறிவிக்கிறேன். |

**(ஆ) அறவிடப்பட வேண்டியுள்ள ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 6,435,113 ஆனதுடன், அவற்றில் ஓய்வு பெற்ற, சேவையை விட்டு விலகிய மற்றும் மரணமடைந்த ஊழியர்கள் 54 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 120,244 ஆன கடன் மீதி 05 வருடங்களுக்கு அதிக காலமாக | அறவிட வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவிட முடியாத தொகையை தொடர்பாக சட்ட நடவடிக்கை | ஓய்வு பெற்று சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிய அலுவலர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ள போதும் சிலரை தவிர ஏனையவர்களின் வதிவிட வித்தியாசம் காரணமாக அறிவிக்க முடியாதுள்ளதுடன் மரணித்த ஊழியர்களிடமிருந்து கடன் தொகையை அறவிட |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவையாக உள்ளதுடன் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | எவ்வித அறிக்கையும் இல்லாததன் மீது அறவிடுவது பிரச்சினைக்குரிய ஒன்றாகவுள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு கிடைத்திருந்த ஆபத்தான மரங்கள் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பாக உரிய காலத்தினுள் சேவை பெறுனரிகளிற்கு சேவை வழங்க சபைக்கு இயலாதிருந்தது. | உரிய சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு முதல் கணக்காய்வினூடாக அறிவிக்கப்பட்டுள்ள கடமை செயற்பாடுகளின் தாமதங்களை தவிர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள சமூதாய அடிப்படை சங்கங்களை பதிவு செய்தல், அச் சங்கங்களின் சொத்துக்கள் பொறுப்புக்களின் மேற்பார்வை சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் அவ்வாறான மேற்பார்வை ஒன்று இடம் பெறுவதற்கான சான்றுகள் முன்வைக்கப்படாததுடன் அதிகார எல்லையில் அமைந்துள்ள 22 சமூதாய அடிப்படை சங்கங்களில் 06 மாத்திரமே சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை பதிவு செய்யப்படாத சமூதாய அடிப்படை சங்கங்களில் அமைந்துள்ள குடிநீர் கருத்திட்டங்களை நிர்மாணத்தல், நீடித்தல் மற்றும் பராமரிக்க சபையின் அங்கீகாரத்தை வழங்காதிருக்க சபையினால் பரிந்துரைத்துள்ளதுடன், பதிவு செய்ததன் பின்னர் குறித்த கருத்திட்டங்களிற்கு வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கவும் அவற்றின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான மேற்பார்வை நடவடிக்கைகள் மகா சபையிற்கு சமர்பிக்கும் முன்மொழிவொன்றின் ஊடாக தீர்மானமொன்றை எடுத்து சபைக்கு சுவீகரித்துக் கொள்வது தொடர்பாக முன்நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விடயபொறுப்பு உத்தியோகத்தரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | பிரதேசத்தின் ஒவ்வொறு பாதையிலும் தற்போது பொருத்தியுள்ள விளக்கு வகை, வோட் அளவு பிரகாரம் ஆவணப்படுத்தும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்காததுடன் வீதி விளக்குகளை திருத்தும் போது பயன்படுத்தாத பொருட்களை மீள் கையேற்றல் மற்றும் பயன்படுத்த முடியாத அகற்றிய | ஆவணப்படுத்தலை துரிதப்படுத்த வேண்டும். | சபை அதிகார எல்லையில் பொருத்தியுள்ள அனைத்து வீதி விளக்குகளையும் இலக்கமிட்டு ஆவணப்படுத்தும் செயற்பாடு தற்போது மேற்கொள்ளப்படுக் கொண்டிருப்பதுடன், எஞ்சிய காலஎல்லையினுள் அதன் வேலைகளை பூர்திதி செய்ய முடியுமென அறிவிக்கிறேன். |

| | | |
|---|---|---|
| உதிரிப்பாகங்களை மீள் கையளிப்பதற்கு உரிய படிவங்களை பயன்படுத்தி பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் அழிக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்த பொருள் இருப்புக்கள் பதிவேடுகள் மற்றும் கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருட் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். வருடாந்த பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ஏல விற்பனைக்காக அனுப்பப்பட்ட பொருட்களை மதிப்பீட்டு பெறுமதிக்கு பெற்றுக் கொள்ள எவரும் முன்வராததால் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படவில்லை. அதனால் அப்பண்டக இருப்பு பதிவேடுகள் மற்றும் கணக்குகளிலிருந்து அகற்றப்படாததுடன், அழிக்கப்பட்ட பண்டங்கள் மாத்திரம் இருப்பு பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. இவ் ஆண்டு மேற்கொண்ட கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் குறித்த பண்டக இருப்பை பதிவேடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் களஞ்சியசாலைப் பொறுப்பாளரின் பொறுப்பில் இருந்த புரொஜக்டர் உபகரணம் காணாமல் போயிருந்ததோடு இது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நட்டத்தை பொறுப்புதார அலுவலரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான புரொஜக்டர் உபகரணம் சமூக அபிவிருத்தி பகுதியூடாக வேலைத் திட்டமொன்றுக்கு கொண்டு சென்று அங்கு காணாமல் போயுள்ளது. குறித்த உபகரணத்தின் பெறுமதி மற்றும் அதற்குரிய 25 சதவீத அரச கட்டணத்தை செலுத்துமாறு சமூக அபிவிருத்தி பகுதிப் பொறுப்பாளரிற்கு அறிவித்தல் |

| | | |
|---|---|---|
| | | ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. செலுத்தத் தவறுமிடத்து அவரின் சம்பளத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கற்பிட்டிய பிரதேச சபைறயிற்கு சொந்தமான வியாபார கட்டிடத்தொகுதி, வாராந்த சந்தை, பொது விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, முன் பள்ளி, நூலகம், சுடுகாடு, பேரூந்தி தரிப்பிட பொது மலசலகூடம் மற்றும் சனசமூக நிலையம் உள்ளிட்ட 60 சொத்துக்கள் (காணி மற்றும் கட்டிடங்கள்) சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுவீகரிப்பை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். | இது வரை சபைக்கு சுவீகரிக்கப்படாத சபையிற்கு சொந்தமான கட்டிடம் உள்ளிட்ட காணிகளை சுவீகரிக்க விரிவான அறிக்கையொன்றை காணி ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதனுடன் தொடர்புடையதாக வடமேல் உள்ளூராட்சி திணைக்களத்தினூடாகவும் தகவல்களை கோரி குறித்த நிறுவனத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வை வலுவூட்டி அதனை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் வழங்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் சபையின் உள்ளக கணகாய்வு நடவடிக்கைகளை செயற்படுத்துமாறு எழுத்து மூலம் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. |